**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**தமிழ்நாடு முதலமைச்சரின் திறமைத் தேடல் தேர்வு - ஜனவரி 2026**

# TAMILNADU CHIEF MINISTER TALENT SEARCH EXAMINATION (TNCMTSE)

**செய்திக் குறிப்பு**

அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் திறனைக் கண்டறிவதற்கும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் "**தமிழ்நாடு முதலமைச்சரின் திறமைத் தேடல் தேர்வு**", 31.01.2026 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது. 1,50,265 மாணவ மாணவியர்கள் இத்தேர்வெழுதினர் .

இத்தேர்வில் 1000 மாணாக்கர்கள் (500 மாணவர்கள் + 500 மாணவியர்கள்) தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பன்னிரண்டாம் வகுப்பு வரை மாதம் ரூ.1000/- வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும் உதவித்தொகையாக உரிய தகுதிகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்ககம் மூலம் ஆண்டுக்கு ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது.

இத்தேர்வின் மதிப்பெண் விவரங்கள் **13.05.2026 அன்று பிற்பகல்** வெளியிடப்படவுள்ளது. எனவே இத்தேர்வெழுதிய மாணாக்கர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் RESULTS என்ற தலைப்பில் சென்று TAMILNADU CHIEF MINISTER TALENT SEARCH EXAMINATION Results என்ற பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து மதிப்பெண்களை அறிந்து கொள்ளலாம். மேலும், மாணவர் விவரங்களாகிய பெயரின் தலைப்பெழுத்து, பெயரில் உள்ள எழுத்துக்கள், பிறந்த தேதி, பாலினம், மாற்றுத் திறனாளி வகை மற்றும் வகுப்பினம் [BC, BC(M), MBC/DNC, SC, SC(A), ST] ஆகியவற்றில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் தேர்வு கூட நுழைவுச் சீட்டினை இணைத்து dgedsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இரு தினங்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 16.05.2026 க்குப் பின் பெறப்படும் திருத்தங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**

**இயக்குநர்**

**சென்னை** – 600 006

**நாள்:** 13.05.2026